# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1837/43 - 2013 නොවැම්බර් මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.11.21

1837/43 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி சுவீகரிப்பு (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

*எனது இல.:* කො/ප්‍රාලේ/ඉඅත්/3/63/UDA

1964 ஆம் ஆண்டின் காணி சுவீகரிப்பு (திருத்தப்பட்ட) சட்ட இல: 28 பிரிவு 7, உப பிரிவு (1) இன் கீழ், கீழ்வரும் காணி/ஆட்சியுரிமையினை பொதுமக்கள் பாவனைக்காக அரசாங்கம் சுவீகரிக்க எண்ணியுள்ளதென பொது அறிவித்தலை இத்தால் அறிவிக்கிறேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ளானதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட PP Co. 9383 இல் காணித்துண்டு இல. 01 எனக்காட்டப்பட்ட, கோட்டை கிராமத்தில் (கொழும்பு மாநகரசபை வட்டார இல. 20) அமைந்துள்ளதுமான காணி.

மதிப்பீட்டு இலக்கங்கள்: சர் பறன் ஜயத்திலக்க மாவத்தை, 36, 40, 50, 81, 91, 95, 107, 115, 99 1/1, 99 1/3, 99 1/4, 99 1/5, 99 1/6, 99 1/10, 99 1/12, 99 1/15, 99 1/16, 99 1/17, 99 1/18, 99 1/20, 99 1/22, 99 1/23, 99 1/30, 99 1/32, 99 1/34, 99 1/36, 99 2/1, 99 2/4, 99 2/6, 99 2/8, 99 2/12, 99 2/14, 99 2/18, 99 2/24, 99 2/26, 99 2/30, 99 2/32, 99 2/34, 99 2/36, 99 2/38, 99 2/42, 99 2/48, 99 2/54, 99 2/56, 99 2/63, 99 2/66, 99 2/70, 99 3/1, 99 3/7, 99 3/12, 99, 99 3/20 மற்றும் 99 3/25.

நிலத்தடி தளத்தினைக் கொண்டுள்ள நான்கு அடுக்குகளையுடைய நிரந்தரக் கட்டிடம் கோருநர்: அரசு; ஆரம்ப உரிமை கோருநர்: ஜீவக எதிரிசிங்ஹ மற்றும் மாதவி எதிரிசிங்க, இல. 50, பான்ஸ் இடம், கொழும்பு - 07, விஸ்தீரணம்: 0.2964 ஹெக்டயார்கள்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டி. பி. விக்கிரமசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
கொழும்பு.

பிரதேச செயலகம்,
கொழும்பு,
2013, நவெம்பர் 06.

12 - 202


*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.